# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1858/10 - 2014 අප්‍රේල් මස 17 වැනි බ්‍රහස්පතින්දා - 2014.04.17

*1858/10 ஆம் இலக்கம் - 2014 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி வியாழக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


## பகுதி IV (அ) - மாகாண சபைகள்

### மாகாண சபை அறிவித்தல்கள்

**1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க மாகாண சபைகள் (இடைநேர்விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டம்**

தத்துவங்கள் கையளிப்பு

*1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, மாகாண சபைகள் (இடைநேர்விளைவுகள் ஏற்பாடுகள்) சட்டத்துடன் சேர்த்து வாசிக்கப்படும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 2 (4) ஆம் பிரிவின் கீழ் எனக்கு உரித்தாகக்கூடிய அதிகார வரம்பிலுட்பட்ட கிழக்கு மாகாண சுகாதார, சுதேச வைத்திய, சமூக சேவைகள், தகவல் தொழில்நுட்ப கல்வி, கூட்டுறவு அமைச்சர் முகமது இப்றாகிம் முகமது மன்சூர் ஆகிய நான், கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளருக்கும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருக்கும் உதவுவதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் இதன் கீழ் உள்ள அட்டவணையின் I ஆம் நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள அலுவலருக்கு 1983 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் 1992 ஆம் ஆண்டின் 11 ஆம் இலக்க, கூட்டுறவுச் சங்கங்கள் (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தம் செய்யப்பட்டவாறான 1972 ஆம் ஆண்டின் 5 ஆம் இலக்க கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்திலும் அச்சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்ட விதிகளிலும் கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமானவருக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களில் III ஆம் நிரல் குறித்துரைக்கும் தத்துவங்களை தற்போதுள்ள அவரது ஆளுமைக்குட்பட்ட பிரதேசத்துள் அவ்வட்டவணையின் II ஆம் நிரலில் குறிக்கப்பட்டிருக்கும் திகதியில் இருந்து பிரயோகிக்க இக்கட்டளை மூலம் கையளிக்கின்றேன்.*

எம். ஐ. எம். மன்சூர்,<br>
சுகாதார, சுதேச வைத்திய, சமூக சேவைகள், தகவல்<br>
தொழில்நுட்ப கல்வி, கூட்டுறவு அமைச்சர்,<br>
கிழக்கு மாகாணம்.

திருகோணமலை,<br>
*2014,பெப்புருவரி 10.*

**அட்டவணை**

| நிரல் I | நிரல் II | நிரல் III |
|---|---|---|
| 1. தங்கொல்லகே தர்மவீர சந்திரசேகர பெரேரா | 2014.01.01 | கூட்டுறவுச் சங்கங்கள் சட்டத்தின் 3, 4 [4 (2) ஐத் தவிர], 5,6, 7, 8, 33, 39, 42, 43, 44 [44 (6) ஐத் தவிர,] 45, 46, 50, 52, 53, 54, 58, [58 (2) (அ) உம், அத்துடன் 58 (5) உம் தவிர,] 59, 68, 72 ஆகிய பிரிவுகளின் கீழ் பதிவாளரின் சகல அதிகாரங்களுக்கும் கூட்டுறவு ஒழுங்கு விதிகளின், 4,11,13, 16 (ii), 18,19,20,21, 27, 32, 33, 35, 37, 39,40, 41, 42, 43, 48, 49, [49 (xii) தவிர],52, 53 ஆகிய ஒழுங்குவிதிகளின் கீழ் பதிவாளரின் சகல அதிகாரங்களும். |
| 2. ராஜினி கணேசப்பிள்ளை | 2014.01.01 | |
| 3. சின்னத்தம்பி கிருபைராஜசிங்கம் | 2014.01.01 | |
| 4. யூசுப் லெவ்வை முகமது பவுர்டீன் | 2014.01.01 | |
| 5. இம்றா லெவ்வை முகம்மது றாபாய்டீன் | 2014.01.01 | |

5 - 65